DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.S.T.C.114/2025

Prosecution witness – PW 4

| | | |
|---|---|---|
| Name | : திரு.விஜயபாஸ்கரன் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)

09.03.2026

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது கடலாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.முகிலரசன் என்பவர் கடந்த 2025ம் ஆண்டு கடலாடி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தார். அவர் தற்போது பணி மாறுதல் சென்றுவிட்டார். அவரது கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு தெரியும். எனவே அவர் சார்பாக ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

3. சார்பு ஆய்வாளர் திரு.முகிலரசன் என்பவர் கடந்த 01.05.2025ம் தேதி 16.00 மணியளவில் நிலையப்பொறுப்பில் இருந்த போது மீனங்குடி கிராமத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் மகன் கோபாலகிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப கடலாடி காவல் நிலையக் குற்ற எண்.39/2025 பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். வாதியின் புகார் மனு அ.சா.ஆ.3 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். வாதியின் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

4. பின்னர் அன்றே மாலை 17.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் ரஞ்சித்குமார் மற்றும் லிங்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும். பின்னர் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. சம்பவ சாட்சிகளான கோபாலகிருஷ்ணன், கருமுத்து நாகநாதன், வாசு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

6. பின்னர் அன்றே 18.00 மணிக்கு எதிரியை கடலாடி கிருஷ்ணா ஹோட்டல் அருகில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

7. அத்துடன் வழக்கு விசாரணை முடித்து அன்றைய தினமே எதிரி சேதுபதி என்பவர் மீது பிரிவுகள் பிரிவுகள் 296(b), 115(2) BNS ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி நான் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் புலன் விசாரணை அதிகாரி புகார் மனு பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.09 18:51:37 +0530